# செங்கோட்டை நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2023ம் ஆண்டு மாசி திங்கள் 15ம் நாள் 27-02-2023 திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற இருக்கின்றது. எனவே துணைத் தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் வருகை தரும் படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**மன்றப் பொருள் 01 :**

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் செங்கோட்டை வட்ட கூட்டுறவு வசதி சங்கம்(லிட்) TNV-HSG-41, செங்கோட்டை என்பவரால் இந்நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனம் பேருந்து நிலையக் கடை எண் 49W, கடைக்கு அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03-07-2007ன் படி 01-04-2016 முதல் புதிதாக சந்தை மதிப்பீட்டில் நிர்ணயம் செய்து வழங்கிய குத்தகைத் தொகையினை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கு எண் RCOP No 2/2017 வழக்கானது இந்நகராட்சிக்கு சாதகமாக 15-09-2022ன் படி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.4,110/- இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்;3090/2015/அ1)

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.193 மன்றத்தின் அனுமதியின் பேரில் மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிமன்றத்தில் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட், செங்கோட்டை நிறுவனத்தால் சொத்துவரி நிர்ணயம் செய்து வழங்கிய கேட்பு அறிவிப்பினைஆட்சேபணை செய்து தொடரப்பட்ட வழக்கு எண் WP(MD) NO 3554 to 3561 of 2011 வழக்கானது இந்நகராட்சிக்கு சாதகமாக 29-07-2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/- இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.பழ.ராமசாமி வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்;1230/2011/அ1)

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.194 மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட முஸ்தபா பூங்காவிற்கு மின் இணைப்பு வழங்க ரூ.6586/- மின்வாரியத்திற்கு செலுத்தகோரி மின்வாரிய கேட்பு வரப்பெற்றுள்ளது மேற்படி தொகை ரூ.6586/- மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.195 மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப் பொருள் 04 :**

செங்கோட்டை நகராட்சி கணினி வரி வசூல் மையத்தில் வசூலாகும் பணத்தினை எண்ணுவதற்கு Counting Machine வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Intrinsic Systems and Peripherals, Madurai | ரூ.15000/- |
| 2. | Sigma Business Machines, Madurai | ரூ.18586/- |
| 3. | Heera Industrties, Madurai | ரூ.17110/- |

அலுவலக குறிப்பு

1) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் Intrinsic Systems and Peripherals, Madurai நிறுவன குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுதிக்கலாம்.
2) மேற்படி Counting Machine வாங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.196 Intrinsic Systems and Peripherals ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப் பொருள் 05 :**

செங்கோட்டை நகராட்சியில் பணியாற்றி வரும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆகியோர்களுக்கு 2022-2023ம் ஆண்டிற்கு பொங்கல் பண்டிகை தினத்தில் கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் சீருடைகள் கொள்முதல் செய்து பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. மேலும் சீருடைகள் தைத்திட தையல் கூலி மொத்தம் ரூ.14,640/- கீழ்கண்டபடி பணியாளர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர்கள் விபரம் | பணியாளர்கள் எண்ணிக்கை | தையல் கூலி ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (ஆண்கள்) | 12 | 800 | 9600 |
| 2 | ஓட்டுநர்கள் (ஆண்கள்) | 3 | 800 | 2400 |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் (ஆண்கள்) | 3 | 800 | 2400 |
| 4 | தூய்மைப் பணியாளர்கள் (பெண்கள்) | 2 | 80 | 160 |
| 5 | அலுவலக உதவியாளர் (பெண்) | 1 | 80 | 80 |
| மொத்தம் | | 21 | | 14,640/- |

(ந.க.எண் ;2296/2016/எச்1 )

அலுவலக குறிப்பு :

மேற்காணும் செலவுத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.197 சீருடைகள் வாங்க மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் 06 :</u>

செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள 7 சமுதாய கழிப்பிடங்களை சுய உதவிக்குழுக்கள் மூலம் திறம்பட நடத்துவது என்ற நிலையில் தற்சமயம் மிகவும் சீர்கேடாகவும் தூய்மை இல்லாமலும் இருப்பதாலும் வேறு குழுக்களுக்கு மாற்றி அமைத்திட இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 144 நாள் 19-09-2022ம் தேதிய தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதன் படி, கீழ்கண்ட சுய உதவிக் குழுக்களின் மூலம் சமுதாயக் கழிப்பிடங்களை பராமரித்திடவும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | சுய உதவிக் குழுக்களின் விபரம் |
|---|---|---|
| 1 | 01 | சந்தியா மகளிர் சுய உதவிக்குழு |
| 2 | 01 | உத்ரா மகளிர் சுய உதவிக் குழு |
| 3 | 09 | மலர் பெண்கள் சுய உதவிக் குழு |
| 4 | 10 | ரோஜா மகளிர் சுய உதவிக் குழு |
| 5 | 22 | சக்தி மகளிர் சுய உதவிக் குழு |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.198 தற்சமயம் உள்ள குழுக்கள் துப்புரவு இல்லாததாலும், சீர் கேடாகவும் உள்ள நிலையில் வேறு குழுக்கள் அமைத்து அந்த குழுக்கள் மூலம் செயல்படவும், மேலும் கட்டுப்பாடுகள் மூலமாகவும் இயங்கிட மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் 07 :</u>

செங்கோட்டை நகராட்சி ஏற்கனவே ODF+ திறந்த வெளியில் மலங்கழித்தலற்ற பகுதி என சான்று கடந்த ஆண்டு 31-03-2022ம் தேதி பெறப்பட்டுள்ளது. அதன் புதுப்பித்தல் காலம் 30-03-2023ம் தேதி முடிவடைய இருப்பதாலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட நேரடி அறிவுரை நாள் 06-01-2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி மற்றும் வாட்ஸ் அப் செய்தி நாள் 08-02-2023ன்படியும் ODF++ சான்று பெற செங்கோட்டை நகராட்சி திறந்த வெளியில் மலங்கழித்தலற்ற நகராட்சி என அறிவிப்பு வெளியிடுவதற்கும், ஆட்சேபணை ஏதும் இருப்பின் பொது மக்கள் தெரிவிக்கலாம் என தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

ODF++ திறந்த வெளியில் மலங்கழித்தலற்ற நகராட்சி என அறிவிப்பு வெளியிடுவதற்கும், ஆட்சேபணை ஏதும் இருப்பின் பொது மக்கள் தெரிவிக்கலாம் என தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.199 மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் 08 :</u>

செங்கோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் மற்றும் பொதுப் பணிகள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவைவரி இவைகள் அந்தந்த மாதம் அரசு கணக்கில் தொகை நகராட்சியின் கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. அவை உரிய ஒப்பந்நக்காரர்களின் கணக்கில் ஈடாக்கம் செய்வதற்கு தனியார் பட்டயக்கணக்கர் மூலமாக மாதாமாதம் இணக்கம் செய்யப்படு வருகின்றது. இவ்வாறு தனியார் பட்டயக் கணக்கர் மூலமாக வருமான வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரிகளை இணக்கம் செய்வதற்கு ரூ.6800/- அசோசியட் அக்கவுண்ட்டண்ட்ஸ் பி.லிட் தென்காசிக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.200 மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.